முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சகாதேவன் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

27.01.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **கருணை வடிவாக மக்களை நோக்கி**
   **காக்கும் சக்தியாக வரம் தந்து**
   **தருமம் வளர்க்கும் அரங்க ஞானியே**
   **தவசியே உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
   குறையிலா **விளம்பி கலை திங்கள்**
   **தெரியவே முன்னான்னோர் திகதி கதிர் வாரம்**
   **(விளம்பி வருடம் தை மாதம் 13ம் நாள் 27.01.2019, ஞாயிற்றுக்கிழமை)**
   **தேசிகனுக்கு சகாதேவன் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உலகமெங்கும் அரங்கன் அருளும்
   ஞான உபதேசங்கள் எல்லாம்
   ஞானிகளின் வாக்காக பரவிட
4. பரவிட மக்களின் மனதுள்ளே
   பரோபகாரம் பெருகி நன்கு
   அறமுடன் சுத்த சன்மார்க்கம்
   அமைதி படுத்தும் யோகநெறியாக மாறி
5. மாறியே உலகமெங்கும் அமைதி
   மண்ணுலகமே சமத்துவ பூமியாக
   மாறியே சமாதானம் சமதர்மம்
   மகான்கள் உருவாகும் பூமியாகும்
6. ஆகவே ஆளுமை மாந்தர்களும்
   ஆசாபாசம் வழி பேராசையை கைவிட்டு வர
   சுகமான எல்லோரும் மகிழ்வுற
   சுபிட்சமான உலகமாக மாறும்
7. மாறவே கலிகால மக்களே
   மாதவசி சக்திமிகு எல்லையை
   தேறவே யாவரும் வந்து சேவித்து
   தீட்சை ஆசி பெற்று வருக
8. வருகவே அவரவர்க்கு உள்ளும்
   வடிவேலன் சக்தி பரவியே
   தருமம் வளர்க்கும் சூழலும்
   தக்க இயற்கை வளமும் பலமும்
9. பலமான ஆளுமை நிலையும்
   பக்குவமான பதவியாளர்களும்
   பலமுடன் பெருகி நன்கு இனிதே
   பசுமைபட எல்லாத் துறைகளும்

10. துறைகளும் நியாயம்பட வளர்ச்சி
திடமான நிறைவும் பலமும் பெறும்
குறையிலா கழனி சிறப்பும்
குடிகாக்கும் கழனி மக்களிடை ஒற்றுமையும்

11. ஒற்றுமையும் உயர்வும் பெருகி
உலகமே பொருளாதார வளமுடன்
ஏற்றமும் எல்லா சிறப்பும் காணும்
இயம்பிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சகாதேவன் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா கருணையுடன், கருணையே வடிவாக அவதரித்து மக்களைக் காக்கும் மகா சக்தியாக தோன்றி மக்களுக்கு வரம் தந்து தருமத்தினை வளர்க்கும் அரங்கமகா ஞானியே அற்புதமான தவசியே அளவற்ற உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 13ம் நாள் 27.01.2019, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே சகாதேவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சகாதேவன்.

உலகமெங்கும் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகன் அருளுகின்ற ஞான உபதேசங்கள் எல்லாம் ஞானிகளின் வாக்காக பரவி வர, உலக மக்களின் மனதுள்ளே பரோபகாரமாகிய ஜீவதயவு பெருகி அறத்துடன் சுத்த சன்மார்க்கம் வளர்ந்து மக்களை அமைதிப்படுத்துகின்ற யோகநெறியாக மாறி உலகமெங்கும் அமைதியை உண்டாக்கும். உலகமே சமத்துவ பூமியாக மாறி சமாதானமும் சமதர்மமும் பெருகி உலகினில் அந்த இடங்கள் எல்லாம் மகான்கள் உருவாகும் பூமியாக மாறிடும்.

ஆதலினால் நாட்டினை ஆட்சி செய்கின்ற ஆட்சியாளர்களும் ஆசைகளாலும் பாசத்திற்கு ஆட்பட்டு ஆசாபாசம் வழி தவறாக செல்லாமல் பேராசைகளை கைவிட்டுவிட்டு நாட்டை ஆட்சி புரிய மக்கள் எல்லோரும் மகிழும்படி சுகமான சுபிட்சமான தேசமாக இவ்வுலகமே மாறிடும்.

இவ்விதம் உலகம் நல்லுலகமாக மாறிட கலிகால மக்களே மகாதவசியும் எல்லையில்லா ஆற்றல்மிகு கலியுக ஞானியும் ஆகிய அரங்கன் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து அவரவரும் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவே அரங்கனை பயபக்தியுடன் பணிந்து வணங்கி அரங்கனிடத்து தீட்சை உபதேசம் அடைந்து ஆசி பெற்று வர வேண்டும். அப்படி தொடர்ந்து அரங்கனிடத்து ஆசி தீட்சைகளை பெற்று வரவர, தீட்சை பெறுகின்ற அன்பர்களின் உள்ளத்திலே வடிவேலனின் முருகப்பெருமானின் அற்புதமான தெய்வீக சக்திகள் பரவியே அவர்களுக்குள்ளும் பரோபகார சிந்தையை வளர்த்து அவர்களை தர்மங்கள் தொடர்ந்து செய்ய தூண்டி, தொடர்ந்து தர்மங்களை செய்வதற்கு உண்டான சூழ்நிலைகளையும் உண்டாக்கி அதற்கு உகந்த இயற்கை வளமும் பலமும், பலம்மிக்க ஆளுமை தன்மையையும் அளிக்கும்.

உலகமெலாம் அரங்க தரிசனம் பெறபெற, நாட்டின் மக்களின் மனதில் எல்லாம் தருமசிந்தை பரவி நாடு முழுதும் தருமம் பெருகிடும். தருமம் பெருகபெருக நாட்டின் இயற்கை வளம் பெருகி நல்ல ஆட்சி நாட்டினில் உருவாகி நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் பக்குவமானவர்களாகவும் சிறந்த பதவியாளர்களாகவும் ஆகி பண்புள்ள மக்கள் நாட்டில் பெருகி நாடெங்கும் பசுமை பெருகி நாட்டின் எல்லா துறைகளும் நியாயமான முறையில் வளர்ச்சியடைந்து திடமுடன் நாடு விளங்கி மக்களெல்லாம் நிறைவுடன் வாழ்வர், நாடு நல்ல பலமுடன் திகழும். நாட்டில் விவசாயம் பெருகும், விவசாயிகளும் ஒற்றுமையுடன் வாழ்ந்து உயர்வான வாழ்வை வாழ்வார்கள். உலகமே பொருளாதார வளம் பெருகி நல்ல முன்னேற்றத்தை அடைந்து எல்லாவிதமான சிறப்புகளையும் காணுமப்பா என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சகாதேவன்.

–சுபம்–